Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

**PART - I**

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| *அதிகாரம் பெற்ற வெளியீடு* | Publiée par Autorité | Published by Authority |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **வியாழக்கிழமை** | **2025 ஹீ** | **ஆகஸ்ட் மீ** | **7 வ** |
| **No.** | **79** | **Poudouchéry** | **Jeudi** | **7** | **Août** | **2025 (16 Sravana 1947)** |
| **No.** | | **Puducherry** | **Thursday** | **7th** | **August** | **2025** |


புதுச்சேரி அரசு

**தேர்தல் துறை**

*எண் தே. 135(1)/2025/403.*

அறிவிக்கை

கீழ்க்காணும் அறிவிக்கைகள் பொதுமக்கள் தகவலுக்காக மீண்டும் வெளியிடப்படுகின்றன:

(1) புதுதில்லி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07-ஆம் தேதியிட்ட 480/Programme/2025 எண்ணுள்ள அறிவிக்கை:

(2) புதுதில்லி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07-ஆம் தேதியிட்ட 480/P.O.P/2025 எண்ணுள்ள அறிவிக்கை:

*புதுச்சேரி, நாள் 07, ஆகஸ்ட் 2025.*

**ப. ஜவஹர்,** இ.ஆ.ப.,
தலைமை தேர்தல் அதிகாரி.

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி - 110 011.
2025 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 7ஆம் தேதி
ஸ்ரவண மாதம், 16ஆம் தேதி, 1947 (சக)

### அறிவிக்கை

**எண். 480/Programme/2025:–** இந்திய குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் அவர்கள் பதவி விலகிய காரணத்தால் குடியரசு துணைத் தலைவர் பதவி 21 ஜூலை 2025 முதல் காலியானதாலும்; மற்றும்

ஆகையால், இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 68 உட்பிரிவு 2ன் படி காலியான குடியரசு துணைத் தலைவர் பதவியை நிரப்ப கூடிய விரைவில் தேர்தல் நடத்த வேண்டியது அவசியமானதாலும்: மற்றும்

ஆகையால், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல்கள் சட்டம், 1952-ன் (31/1952) 4-ஆவது பிரிவில் (4)-வது உட்பிரிவிற்கிணங்க, இந்திய தேர்தல் ஆணையம் குடியரசு துணைத் தலைவர் பதவியை நிரப்புவதற்கான தேர்தலுக்கான தேதிகளை நிர்ணயிக்க வேண்டியிருப்பதாலும்;

ஆகவே, இந்திய தேர்தல் ஆணையம் இதனால் குறிப்பிடுகின்றது --

(அ) தற்போது ஏற்பட்டுள்ள குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக்காண காலியிடத்தை நிரப்புவதற்கு தேர்வு செய்யும் பொருட்டு, அரசியலமைப்பு விதிகளின்படியும், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசு துணைத்தலைவர் தேர்தல்கள் சட்டம், 1952 (31/1952)-ன் கீழ் விதிகள் மற்றும் ஆணைகளின்படி அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 66-இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் குழுவுக்கு அழைப்பு விடுக்கிறது; மற்றும்

(ஆ) மேற்படி சட்டத்தின் 4-வது பிரிவில் கண்ட (1) உட்பிரிவினையொட்டி, நிர்ணயித்துள்ளது-

| | |
|---|---|
| அ) வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் | : 21 ஆகஸ்ட் 2025 (வியாழக்கிழமை) |
| ஆ) வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யும் நாள் | : 22 ஆகஸ்ட் 2025 (வெள்ளிக்கிழமை) |
| இ) வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் | : 25 ஆகஸ்ட் 2025 (திங்கட்கிழமை) |
| ஈ) வாக்குப் பதிவு நாள், தேவைப்படின் | : 9 செப்டம்பர் 2025 (செவ்வாய்க்கிழமை) |

ஆணைப்படி

சுமன் குமார் தாஸ்
செயலர்

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி - 110 011.
2025 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 7ஆம் தேதி
ஸ்ரவண மாதம், 16ஆம் தேதி, 1947 (சக)

### அறிவிக்கை

**எண். 480/P.O.P/2025:-** 1974-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் விதிகளின் 8-வது விதிக்கிணங்க இந்தியத் தேர்தல் ஆணையம்-

(அ) 2025- ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாளிட்ட எண்.480/Programme/2025- ஆம் எண்ணுள்ள அறிவிக்கைப்படி, புதுடில்லியிலுள்ள நாடாளுமன்ற இல்லம், முதல் மாடி, வசூதா, எப்-101-வது எண் கொண்ட அறையை குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறும் இடமாகவும்;

(ஆ) மேற்படி இடத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் தேர்தல், தேவைப்படின், நடக்குமெனவும் இதனால் குறிப்பிடுகின்றது.

ஆணைப்படி

சுமன் குமார் தாஸ்
செயலர்

---

GOVERNMENT OF PUDUCHERRY
**ELECTIONS DEPARTMENT**

No. E.135(1)/2025-403

*Puducherry, the 07th August 2025.*

The following notifications of the Election Commission of India are republished for the information of general public.

| Notification No. and date (1) | Relating to (2) |
|---|---|
| (i) 480/Programme/2025, dated 7th August 2025 | Schedule for Vice-Presidential Election, 2025. |
| (ii) 480/P.O.P/2025, dated 7th August 2025 | Place and Time for Vice-Presidential Election, 2025. |

P. JAWAHAR, I.A.S.,
CHIEF ELECTORAL OFFICER

**ELECTION COMMISSION OF INDIA**
**Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110 001.**

**Dated: 07th August, 2025**
**Sravana 16, 1947 (Saka)**

**NOTIFICATION**

**No. 480/Programme/2025:-** Whereas, a vacancy in the office of the Vice-President of India has occurred by reason of resignation of Sh. Jagdeep Dhankhar on 21st July,2025; and

Whereas, under clause (2) of Article 68 of the Constitution of India, an election to fill the said vacancy is required to be held as soon as possible after the occurrence of the vacancy: and

Whereas, under sub-section 4 of Section 4 of the Presidential and Vice-Presidential Elections Act, 1952 (31 of 1952), the Election Commission of India is required to appoint the dates for the election to fill the office of the Vice President of India;

Now, therefore, the Election Commission of India hereby –

(A) calls upon the Electoral College, referred to in Article 66 of the Constitution, to elect a person to fill the above vacancy in the Office of Vice-President of India, in accordance with the provisions of the Constitution, the Presidential and Vice-Presidential Elections Act, 1952 (31 of 1952), and the Rules and Orders made thereunder; and

(B) in pursuance of sub-section (1) of Section 4 of the said Act, appoints -

a) the 21st August, 2025 (Thursday), as the last date for making nominations;
b) the 22nd August, 2025 (Friday), as the date for scrutiny of the nominations;
c) the 25th August, 2025 (Monday), as the last date for the withdrawal of candidatures; and
d) the 9th September, 2025 (Tuesday), as the date on which a poll shall, if necessary, be taken.

(By order)

SUMAN KUMAR DAS,
Secretary.

**ELECTION COMMISSION OF INDIA**
**Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110 001.**

**Dated: 07th August, 2025**
**Sravana 16, 1947 (Saka)**

**NOTIFICATION**

480/P.O.P/2025:- In pursuance of Rule 8 of the Presidential and Vice Presidential Elections Rules, 1974, the Election Commission of India hereby:

(a) fixes Room No. F-101, Vasudha, First Floor, Parliamentary House, New Delhi as the place of polling for the Vice-Presidential Election to be held in accordance with its Notification No. 480/Programme/2025, dated the 07th August, 2025; and

(b) specifies the hours from 10.00 a.m. to 5.00 p.m. both inclusive to be the hours during which the poll shall, if necessary, be taken at the said place of polling.

(By order)

SUMAN KUMAR DAS,
Secretary.

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.